செ.வெ.எண்:13 நாள்:04.11.2017

# பத்திரிக்கைச்செய்தி

பண்டிகை காலங்களில் ஒரு சில வணிக நிறுவனங்கள் சுய இலாபத்திற்காக ‘‘பரிசுக் குலுக்கல்’’ என்ற திட்டத்தின் மூலம் பொருட்களின் விலையைக் கூட்டியும், தரமற்ற பொருட்களை விற்பனை செய்தும், குறைந்த விலையில் வீட்டு மனைகள் விற்பனை செய்து மக்களை ஏமாற்றி வருகின்றனர், எனத் தெரிகிறது. பரிசு குலுக்கல் திட்டம் நடத்தும் ஒரு சில வணிகர்கள், தங்கள் பொருட்களை விலை குறைத்து தரமற்ற பொருட்களை விற்பது, அளவுக் குறைப்பு செய்வது, கலப்பட பொருட்களை விற்பனை செய்வது மூலம் நுகர்வோர்களை ஏமாற்றுகின்றனர். எனவே பரிசு குலுக்கல் என்ற பெயரில் ஏமாற்று வேலைகள் ஜவுளிக்கடை, பெட்ரோல் பங்க், ரியல் எஸ்டேட், ஸ்வீட் ஸ்டால் போன்ற இடங்களில் நடத்தப்படுகிறது எனவும் இதுபோன்ற முறைகேடாக விளம்பரங்களும் பரிசு குலுக்கல் பற்றிய செய்திகளும் வரப்பெறின் இது தொடர்பாக கரூர் மாவட்ட காவல் துறையினருக்கு தகவல் அளிக்குமாறு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.கோவிந்தராஜ், இ.ஆ.ப., தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**